தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2021
**Conducted by Field Work Centre, Thondaimanaru.**
**3rd Term Examination - 2021**


| | | | | |
|---|---|---|---|---|
| கர்நாடக சங்கீதம் Music | Three Hours / Gr -12 (2022) | 55 | T | I,II |

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. அவரோகணம் மட்டும் வக்ரமாயுள்ள இராகம்.
   1) ஆனந்தபைரவி  2) ஸ்ரீராகம்  3) பேகட
   4) ஸகானா  5) ரீதிகௌளை

02. பச்சை சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் உருப்படி.
   1) லட்சணகீதம்  2) சூளாதி  3) தில்லானா
   4) கிருதி  5) ஜாவளி

03. “ கௌரிநாயகா” என்னும் தில்லானாவை ஸிம்ஹநந்தன தாளத்தில் இயற்றியவர்.
   1) வீரபத்திரஐயர்  2) K. பொன்னையாபிள்ளை
   3) பாலமுரளிகிருஷ்ணா  4) மஹாவைத்தியநாதய்யர்
   5) லால்குடிஜெயராமன்

04. ஒரே இடத்தில் வைக்கப்பட்டு வாசிக்கப்படும் வாத்தியம்.
   1) ஸ்திரவாத்தியம்  2) சரவாத்தியம்  3) ஸாதக வாத்தியம்
   4) நிஷ்கள வாத்தியம்  5) ஸகலவாத்தியம்

05. “ஸ்வரமாலிகா” என்னும் நூலை வெளியிட்டவர்.
   1) பாக்  2) மொசாட்  3) பாத்கண்டே
   4) அமீர்குஸ்ரு  5) தான்சேன்

06. தனது உருப்படிகளில் பரியாய முத்திரையை கையாண்ட வாக்கேயகாரர்
   1) ஸ்வாதிதிருநாள் மகாராஜா  2) பைடாலகுருமூர்த்தி சாஸ்திரி
   3) அருணாகிரிநாதர்  4) முத்துஸ்வாமி தீட்சதர்
   5) தியாகராஜஸ்வாமி

07. கோட்டு வாத்தியத்தின் பரிவு நாதத் தந்திகள்.
   1) 6  2) 8  3) 10  4) 12  5) 15

08. ஆனந்தபைரவி இராகத்தில் வரும் அன்னியஸ்வரம்
   1) சுத்ததைவதம்  2) சதுஸ்ருதிதைவதம்  3) சுத்தரிஷபம்
   4) சதுஸ்ருதி ரிஷபம்  5) அந்தரகாந்தாரம்

09. தான்சேன் அறிமுகப்படுத்திய புதிய இராகம்

1) பூர்வி 2) பஹார் 3) பீலு

4) யமன் கல்யாணி 5) மியான் - மீ – மல்ஹார்

10. "கயான் உதேஜாக்மண்டலி" என்ற இசைச் சங்கத்தில் சேர்ந்து இசை உலகிலேயே தன்வாழ் நாட்களைகளை கழித்தவர்

1) மொசாட் 2) தான்சேன் 3) பாத்கண்டே

4) பாக் 5) அமீர்குஸ்ரூ

11. 35, 108, 175 தாளங்களில் பாடல்களை இயற்றியவர்.

1) ஸ்வாதித் திருநாள் மகாராஜா 2) அருணகிரிநாதர்

3) பைடால குருமூர்த்தி சாஸ்த்திரி 4) M.S.சுப்புலட்சுமி

5) N. வீரமணிஐயர்

12. "Moon light Sonata" என்ற ஆக்க இசையில் பிரபல்யம் பெற்றவர்.

1) பாக் 2) தான்சேன் 3) பாத்கண்டே 4) மொசாட் 5) பீதோவன்

13. நவரச கள்ளட என்பது

1) ஓர் ஔடவராகம் 2) ஒருஷாடவராகம் 3) ஸ்வராந்தரராகம்

4) வக்ரராகம் 5) வர்ஜராகம்

14. கிருதி என்ற இசை வடிவத்தின் ஸ்தாயி எல்லை

1) 1½ ஸ்தாயி முதல் 2 ஸ்தாயிவரை 2) 1½ ஸ்தாயி முதல் 3 ஸ்தாயிவரை

3) 2 ஸ்தாயி முதல் 3 ஸ்தாயி வரை 4) 1 ஸ்தாயி முதல் 2 ஸ்தாயி வரை

5) 1 ஸ்தாயி முதல் 2½ ஸ்தாயிவரை

15. 72 மேளகர்த்தா சக்கரத்தில் விவாதி மேளங்களை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் சக்கரங்கள்.

1) இந்து, அக்னி, வேத, பாண 2) நேத்ர, திசி, ருத்ர, வேத

3) இந்து, ருது, ரிஷி, ஆதித்ய 4) வஸு, பிரஹ்ம, ருத்ர, ஆதித்ய

5) வேத, பாண, திசி, ருத்ர

16. தாலாட்டு பாடல்களும், ஊஞ்சற் பாடல்களும் பாடுவதற்கு மிகப் பொருத்தமான இராகம்.

1) ரீதிகௌளை 2) கமாஸ் 3) ஆனந்தபைரவி

4) சாரங்கா 5) அடானா

17. மனோதர்ம சங்கீத பிரிவுகளுள் தாளத்துடன் பாடப்படாத பிரிவு

1) நிரவல், தானம் 2) இராகம், கற்பனாஸ்வரம் 3) பல்லவி, நிரவல்

4) இராகம், தானம் 5) தானம், பல்லவி

18. 15வது மேளகர்த்தாவின் ஜன்யமான ஔடவசம்பூர்ண இராகம்.

1) சாவேரி 2) வசந்தா 3) ஹம்சத்வனி 4) ஆபோகி 5) ஸ்ரீரஞ்சன்

19. “அலகு யாழ்” என அழைக்கப்படும் வாத்தியம்.

1) கடம் 2) முகாசிங் 3) கெஞ்சிரா
4) கோட்டுவாத்தியம் 5) வீணை

20. “தஞ்சம்” என்ற வர்ணத்தை இயற்றியவர்.

1) K. பொன்னையாபிள்ளை 2) ராமநாதபுரம் ஸ்ரீனிவாஸய்யாங்கார்
3) பாபநாசம் சிவன் 4) லால்குடி ஜெயராமன் 5) பட்டணம் ஸுப்ரமணியஜயர்

21. நாட்டிய நிகழ்வில் 7ஆவது இடத்தை வகிக்கும் உருப்படி.

1) பதவர்ணம் 2) தில்லானா 3) ஜாவளி
4) கீர்த்தனை 5) வர்ணம்

22. “வரப்ரஸாதி” என்னும் பட்டத்தை பெற்றவர்.

1) டி.கே. பட்டம்மாள் 2) லால்குடி ஜெயராமன் 3) M.S.சுப்புலட்சுமி
4) வீணை பாலச்சந்தர் 5) M.L.வசந்தகுமாரி

23. சாகித்தியத்தின் நடுவே சொற்கட்டுக்கள் வரும் அணி.

1) சொற்கட்டுஸ்வரம் 2) சிட்டைஸ்வரம் 3) சொற்கட்டு சாகித்தியம்
4) மகுட சாகித்தியம் 5) ஸ்வர சாகித்தியம்

24. ருத்ரசக்கரத்தில் மூன்றாவது இராகம்.

1) லதாங்கி 2) ஹேமவதி 3) வாசஸ்பதி 4) தாதுவர்த்தனி 5) மேசகல்யாணி

25. சம்பூர்ண ஷாடவ இராகம்.

1) ஸாரமதி 2) கருடத்வனி 3) ஸ்ரீரஞ்சனி
4) பைரவம் 5) மலையமாருதம்

(25X1=25புள்ளிகள்)

## பகுதி II

❖ **"அ" பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் "ஆ" பகுதியில், இருந்து ஒரு வினாவிற்கும் "இ" பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### "அ" பகுதி

*01.* 1) ஜாவளி எத்தனையாம் நூற்றாண்டு இயற்றப்பட்ட உருப்படி?
   2) ஜதி, ஸ்வரம், வார்த்தைகள் கொண்டு அமைந்த உருப்படி யாது?
   3) இராகத்திருலா, சுங்கதியிலோ வரக்கூடிய முடிவுஸ்வரத்தை எவ்வாறு அழைப்பர்?
   4) M.S சுப்புலட்சுமிக்கு ''மக்சபாய்'' என்னும் உயர் விருதினை வழங்கிய நாடு எது?
   5) இசைக் கருவிகளை வாசிக்கும்போது ஐந்து விரல்களை பயன்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தியவர்?
   6) கோட்டு வாத்தியம் வாசித்து பிரபல்யம் பெற்ற இரு இசைக் கலைஞர்களின் பெயர் தருக?
   7) பைடால குருமூர்த்தி சாஸ்திரி அவர்களின் சிஷ்யர்கள் இருவர் பெயர் தருக?
   8) அருணகிரிநாதர் அவர்களின் சிறப்புப் பெயர் இரண்டு தருக?
   9) அமீர்குஸ்ருவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு உருப்படிகள் தருக?
   10) ''பொன்னும் மெய்ப்பொருளும்'' என்ற தேவாரத்தை அருளியவர், தலம் என்பவற்றை தருக?

(15 புள்ளிகள்)

### "ஆ" பகுதி

*02.* 1) வக்ர ராகம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)
   2) வக்ர ராகப் பிரிவுகளை விளக்கி உதாரணம் தருக? (6 புள்ளிகள்)
   3) நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய இராகங்களை விளக்கி உதாரணம் தருக? (6 புள்ளிகள்)

*03.* 1) இசைக் கருவிகளின் பிரதான பிரிவுகள் எவை? (2 புள்ளிகள்)
   2) இதர பிரிவுகள் எட்டினையும் தருக? (8 புள்ளிகள்)
   3) அவற்றுள் ஐந்தினை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

### "இ" பகுதி

*04.* பின்வரும் இராகங்களுள் ஒன்றிற்கு லட்சணம் தருக.
   1) ஸ்ரீரஞ்சனி   2) ஹிந்தோளம்   3) ஹம்சத்வனி

(15 புள்ளிகள்)

*05.* பின்வருவனவற்றுள் ஒன்றிற்கு விரிவான லட்சணம் தருக?
   1) லட்சணகீதம்   2) தில்லானா

*06.* 1) ஹிந்துஸ்தானி வாக்கேயகாரர் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)
   2) அவர்களுள் ஒருவரின் இசைத் தொண்டையும், வாழ்க்கை வரலாற்றை விபரிக்குக. (12 புள்ளிகள்)

*07.* 1) இராகத்தின் 10 லட்சணங்களும் எவை? (5 புள்ளிகள்)
   2) அவற்றுள் ஐந்தினை விபரிக்குக. (10 புள்ளிகள்)